www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

QL

# காலாண்டுப் பொதுத் தேர்வு – 2024

9 - ஆம் வகுப்பு

# தமிழ்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

குறிப்புகள் : I ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க

II) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) சரியான விடையைத் தேர்வு செய்க. 15 × 1 = 15

1. தமிழ்விடுதூது ____ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச்செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி
3. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்
4. மல்லல் மூதூர் வயவேந்தே – கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய
5. மணிமேகலை காப்பியத்தின் ஆசிரியர் யார்?
   அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர் இ) சீத்தலைச் சாத்தனார் ஈ) சேக்கிழார்
6. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
   அ) தேசியத் திறன்றித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
   இ) தேசியத் திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி
7. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு
   அ) வேற்றுமைதொகை ஆ) ஈறுகெட்டஎதிர்மறைப்பெயரெச்சம்
   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை
8. 'பொதுவர்கள் பொலிஉறப் போர்அடித்திடும்' நிலப் பகுதி ____
   அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை
9. தீரா இடும்பை தருவது எது?
   அ. ஆராயாமை, ஐயப்படுதல் ஆ. குணம், குற்றம்
   இ. பெருமை, சிறுமை ஈ. நாடாமை, பேணாமை
10. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே இரண்டறிவதுவே அதனொடு நாவே இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?
    அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்
11. திறன் அட்டை என்பவை கீழ்க்கண்டவற்றுள் எதனைக் குறிப்பிடுகிறது?
    அ) வங்கி அட்டை ஆ) ஆதார் அட்டை இ) குடும்ப அட்டை ஈ) ஓட்டுநர் உரிமம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பாடலைப் படித்து வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடையளிக்க:-

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்*

12. இப்பாடல் இடம் பெற்ற நூல்
அ. தமிழ்விடுதூது ஆ. புறநானூறு இ. பெரியபுராணம் ஈ. நாலடியார்

13. இப்பாடலை இயற்றியவர் ___________
அ. குடபுலவியனார் ஆ. சேக்கிழார் இ. கவிஞர் தமிழொளி ஈ. சமண முனிவர்கள்

14. ' கழை ' என்பதன் பொருள் __________
அ. சோலை ஆ. பக்கம் இ. கரும்பு ஈ. சிறுகிளை

15. ' கருங்குவளை' – என்பதன் இலக்கணக் குறிப்பு அ. பண்புத்தொகை
ஆ. வினைத்தொகை இ. உம்மைத்தொகை ஈ. உவமைத்தொகை

## பகுதி – II ( மதிப்பெண்கள் : 18 ) பிரிவு – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4 × 2 = 8
(21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)

16. விடைக்கேற்ற வினா அமைக்க.
அ. மேற்கிலிருந்து வீசும் காற்று கோடை எனப்படும்.
ஆ. மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம் என்பனவாகும்.

17. கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தருக.

18. உங்கள் பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

19. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

20. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?

21. எனைத்தானும் – எனத்தொடங்கும்குறளைஎழுதுக.

## பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 × 2 = 10

22. வல்லினம் மிகும் இடங்களுக்கு இரண்டு சான்றுகள் தருக.

23. ஒரே சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக.
எண்ணெய்ஊற்றி ______விளக்கு ஏற்றியவுடன், இடத்தைவிட்டு _____.

24. கலைச்சொல் தருக : அ) Hero stone ஆ) Download

25. வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.

26. சொல்லுக்குள் சொல் தேடுக. அ. தமிழ்விடுதூது ஆ. பாய்மரக்கப்பல்

27. பிழை நீக்கி எழுதுக.
அ. மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.
ஆ. மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தாள்.

குறிப்பு :- செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.
தொடரைப் பழமொழிகொண்டு நிறைவு செய்க.
அ. இளமையில் ________ ஆ. சித்திரமும் கைப்பழக்கம் __________



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

28. ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக. சேர்ந்து – சேர்த்து.

பகுதி – III ( மதிப்பெண்கள் –18 ) பிரிவு – I

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க :– 2 × 3 = 6

29. மூன்று என்னும் எண்ணுப் பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?

30. ஏறுதழுவுதல், திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?

31. பத்தியைப் படித்து பதில் தருக.

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன.தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள் , ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர்பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன் , ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

அ). மிடுக்கானத் தோற்றத்திற்கும் ஏறுதழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை ?

ஆ). தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று கருதப்படுவது யாது?

இ). மேற்கண்ட பத்தி எதைக் குறிப்பிடுகிறது?

பிரிவு – II

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.
( 34 ஆவது வினாவிற்குக் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.) 2 × 3 = 6

32. 'என் சம காலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?

33. பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

34. அ) " ஒன்றறிவதுவே" எனத்தொடங்கும் உயிர்வகைப் பாடலை அடிமாறாமல் எழுதுக. (அல்லது )

ஆ) "நீரின்றிஅமையா" எனத்தொடங்கும் புறநானூறு பாடலை எழுதுக.

பிரிவு –III

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க :– 2 × 3 = 6

35. வல்லினம் மிகா இடங்களுக்கு மூன்று சான்று தருக.

36. தன்வினை, பிறவினை – எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

37. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.

1) பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ யற்று – அ) ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறியும் உரைகல்

2) தத்தம் கருமமே கட்டளைக்கல் – ஆ) அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும்

3) அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் – இ) சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போல

பகுதி –IV ( மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 × 5 = 25

38. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.( அல்லது )

ஆ) இந்திர விழாவைக் காண வந்தோர் பற்றியும் விழா முன்னேற்பாடுகள் பற்றியும் மணிமேகலை கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

39. உங்கள் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் " கால்முளைத்த கதைகள் " என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.
( அல்லது ) ஆ. பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

40. படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுக.



41. மொழிபெயர்க்க.

1. A nations's culture resides in the hearts and in the soul of its people – Mahatma Gandhi
2. The art of people is a true mirror to their minds – Jawaharlal Nehru
3. The biggest problem is the lack of love and charity – Mother Teresa
4. You have to dream before your dreams can come true – A.P.J.AbdulKalam
5. Winners don't do different; they do things differently – Shiv Khera

42. அ) பா நயம் பாராட்டுக

கல்லும் மலையும் குதித்துவந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி – எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன்–பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்; ஊறாத
ஊற்றிலும் உட்புகுந்தேன்–மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். – **கவிமணி** ( அல்லது )

ஆ) என் பொறுப்புகள்...

அ) தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன்.
ஆ) ஆசைப்படும் பொருட்களை முயன்று உழைத்து அவற்றை என்னுடைய பணத்தில்வாங்குவேன். இ)__________________ ஈ)__________________
உ)__________________ ஊ)__________________

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

பின்வரும் கருத்துகளை உள்வாங்கிக் கண்டு வரிசைப்படுத்தி முறையான பத்தியாக்குக.

1. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கே தான் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
2. டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்று அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள்அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக்கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன.
3. இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல்நத்தை, டைனோசரின் வால்பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன.
4. தமிழ்மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்துகொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த்திகழ்கின்றன.

## பகுதி – V ( மதிப்பெண்கள் : 24 )

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** 3 × 8 = 24

43. அ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க. ( அல்லது )

ஆ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

44. அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.( அல்லது )

ஆ) இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை – அகழாய்வு – அகழாய்வின்சிறப்பு – கீழடிஅகழாய்வு – அகழாய்வின்தேவை – பயன் – முடிவுரை( அல்லது )

ஆ) குறிப்புகளைக்கொண்டுகட்டுரைஎழுதுக .

முன்னுரை – நீரின்றிஇயங்காதுஉலகு – நீரின் இன்றியமையாமை – நீர்நிலைகள் – நீர்ப் பற்றாக்குறை ஏற்படக்காரணம் – நீரைச்சேமித்தல் – நிலத்தடி நீர்மட்டம் – முடிவுரை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com